கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம் வேலூர். வேலூர் மாவட்டம்

E.A. 01/2024 In E.P.03/2023

2025ம் ஆண்டு மார்ச் மாதத்தில் 14ம் தேதியில் என்பவரின் மு.வி. வாக்குமூலம் (1908-ஆம் ஆண்டின் சட்டம் 10-வது கட்டளை மற்றும், தொழில் தகராறு சட்டம் 1947ன் படி) Bench Clerk(i/c) T.Sheik Asanar mydeen ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 on the day of 14.03.2025.

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | தன்வீர் சித்திக் |
| 2. | தந்தையார் பெயர் / கணவர் பெயர் | அமீர்பாஷா |
| 3. | தொழில் | Sticker work |
| 4. | வயது | 46 |
| 5. | முகவரி | No.168 C.N.A. |

**முதல் விசாரணை : -**

மனுதாரர் தரப்பு சாட்சி 2 மனுதாரரின் வழக்கிற்காக என்னுடைய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான்.

**குறுக்கு விசாரணை.**

நான் மனுதாரர் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை. ஸ்டிக்கர் கடை வைத்துள்ளேன். என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எதிர்மனுதாரர் மனுதாரரின் நிர்வாகத்தில் வேலை பார்க்கவில்லை என்று கூறியுள்ளேன். ஆனால் அதனை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் அவருக்கு சாதகமாக உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். அவர் தொழிலாளர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு எண் எனக்கு தெரியாது. அவர் சம்பளம் கோரி தாக்கல் செய்த மனுவின் எண் எனக்கு தெரியாது. உயர்நீதிமன்றத்தில் இந்த வழக்கின் மனுதாரர் தாக்கல் செய்த மேல்முறையீடில் எதிர்மனுதாரருக்கு மனுதாரர் பணம் வழங்க வேண்டுமென்று உத்திரவானது பற்றி எனக்கு தெரியும். மனுதாரருக்கு இந்நீதிமன்றத்தில் தொழிற்தகராறு மனுவிலும் கணக்கீட்டு மனுவிலும் எதிர்மனுதாரருக்கு சாதகமாக உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் உயர்நீதிமன்றமும் எதிர்மனுதாரருக்கு சாதகமாக உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் நீதிமன்றங்களின் உத்திரவை இரத்து செய்ய வேண்டுமென்று தவறாக வழக்கின் விவரங்கள் எதுவும் தெரியாமல் இந்த பிரமாணத்தை தாக்கல் செய்துள்ளனே் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(Sd.)Tmt.S.Uma Maheswari,
Presiding Officer(FAC),
Addl.Labour Court,Vellore.